முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA1 பரீட்சை – 2019 யூலை

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்

(ECONOMICS FOR BUSINESS AND ACCOUNTING)

2019-07-27
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***

(3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரே மொழியில்*** *மட்டும் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். ஏதாவது எடுகோள்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு வினைச்சொல் உள்ளடங்கிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல.* ***1.1*** *முதல்* ***1.10*** *வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை வினா இலக்கத்துடன் உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** காணியைப் பயன்படுத்துவதற்கான கொடுப்பனவு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) இலாபம் (2) வாடகை (3) வட்டி (4) கூலி

**1.2** பின்வருவனவற்றுள் கேள்வியைத் (Demand) தீர்மானிப்பது எது?

(1) பிரதியீடுகளின் விலைகள் (2) நுகர்வோரின் வருமானம்

(3) காலநிலைக் காரணிகள் (4) மேலுள்ள சகலதும்

**1.3** பின்வருவனவற்றுள் சிலருரிமை (Oligopoly) நிறுவனமொன்றின் பண்பியல்பாக **அமையாதது** எது?

(1) வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான விற்பனையாளர்கள் மாத்திரம் இருத்தல்

(2) பிரவேசத்திற்கான தடைகள் எதுவுமில்லை.

(3) பொருட்கள் ஓரினத்தன்மையானதாக அல்லது வேறுபட்ட தன்மையுடையதாக இருத்தல்

(4) விலை இறுக்கத்தன்மையுடையதாகக் இருத்தல்

**1.4** வெளியீட்டின் மேலதிக அலகொன்றை உற்பத்தி செய்வதற்குச் செலவிடப்பட்ட மேலதிக கிரயம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) எல்லைக் கிரயம் (2) மொத்தக் கிரயம்

(3) சராசரிக் கிரயம் (4) மாறும் கிரயம்

**1.5** நிறுவனமொன்றின் குறுங்கால ஓட்டத்துடன் (Short run) தொடர்புடைய சரியான கூற்று:

(1) உற்பத்திக் காரணிகள் நிலையான காரணிகள் எனவும் மாறும் காரணிகள் எனவும் பிரிக்கப்படுகின்றன.

(2) நிலையான காரணிகள் எவுதுமில்லை.

(3) சராசரிக் கிரய வளையி அளவுத்திட்டப் பொருளியலினால் (Economies of scale) தீர்மானிக்கப்படுகிறது.

(4) ஒரு நிறுவனத்தால் சகல உள்ளீடுகளையும் மாற்ற இயலும்.

**1.6** 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைக்கு இணங்க, 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம்:

(1) 4.4 % (2) 6 % (3) 3.2 % (4) 4.8 %

**1.7** பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கையின் பண்புசார் கட்டுப்பாடாக (Qualitative control) அமைவது எது?

(1) தொகுதிப்பட்டியல் உச்சங்கள் (2) வங்கி வீதக் கொள்கை

(3) பகிரங்க சந்தைத் தொழிற்பாடுகள் (4) மாறும் ஒதுக்க விகிதக் கொள்கை

**1.8** பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடொன்றாக **அமையாதது** எது?

(1) பொதுப் படுகடன் முகாமைத்துவம்

(2) கடன்கள் மற்றும் மேலதிகப்பற்று வசதிகளை வழங்குதல்

(3) வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம்

(4) நாணய வழங்கலும் முகாமைத்துவமும்

**1.9** வருமானத்தின் தேசிய பாய்வின் ஓர் எடுப்பனவுக்கான (வெளிப்பாய்வுக்கான) உதாரணமாக அமைவது:

(1) முதலீடுகள் (2) அரசாங்கச் செலவுகள்

(3) ஏற்றுமதிகள் (4) இறக்குமதிகள்

**1.10** பின்வருவனவற்றுள் பேரினப் பொருளாதார மாறியாக **அமையாதது** எது?

(1) ஒட்டுமொத்த உற்பத்தி (2) சென்மதி நிலுவை

(3) பொது விலை மட்டம் (4) சந்தைச் சமநிலை

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையிலான பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் "**சரியானதா**" அல்லது "**தவறானதா**" என்பதைக் குறிப்பிடுக. உமது விடையினை (சரியானது / தவறானது) வினாவுக்குரிய இலக்கத்துடன் உமக்குத் தரப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** பிற்போடப்பட்ட கொடுப்பனவின் நியமமாகச் செயற்படுவது பணத்தின் ஒரு தொழிற்பாடாகும்.

**1.12** பணத்தின் உண்மையான வெளிவாரிப் பெறுமதி என்பது பண அலகொன்றுடன் உள்நாட்டுச் சந்தையில் கொள்வனவு செய்யப்படக்கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் கணியத்தைக் (Quantity) குறிக்கிறது.

**1.13** அத்தியாவசியப் பொருள் ஒன்றுக்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி (Income elasticity of demanded) ஆனது ஒன்றை (1) விடக் குறைவானதாகும்.

**1.14** நிறுவனமொன்று அதன் சராசரி மொத்தக் கிரயத்தை ஈடுசெய்யக்கூடிய விலையானது மூடுதல் விலை (shut down price) எனப்படும்.

**1.15** தனியுரிமைப் போட்டியில் வேறுபட்ட பொருட்கள் காணப்படுகின்றன.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவுசெய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.16** விலைக்கும் கேள்விக் கணியத்திற்குமிடையே ...................... *(நேர்மாறான [எதிர்] / நேரான [நேர்])* தொடர்பு காணப்படுகிறது.

**1.17** எல்லை உற்பத்தி (MP) வளையியானது சராசரி உற்பத்தி (AP) வளையியை AP வளையியின் ...................... *(இழிவு / உயர்வு)*ப் புள்ளியில் இடைவெட்டுகிறது.

**1.18** திறைசேரி உண்டியல்கள் / முறிகளை விற்பனை செய்வதன் மூலம், மத்திய வங்கியினால் பண நிரம்பலை (Money supply) ...................... *(அதிகரிக்க / குறைக்க) முடியும்.*

**1.19** உண்மையான சொத்துக்களின் கொள்வனவு என்பது அரசாங்கத்தினால் செய்யப்படும் .................... *(நடைமுறைச் / மூலதனச்)* செலவொன்றிற்கான ஓர் உதாரணமாகும்.

**1.20** ...................... *(தொழில்நுட்ப அபிவிருத்தி / பணவீக்கம்)* என்பது ஒரு நாட்டின் கட்டமைப்பு மாற்றத்திற்கு உதவுகின்ற ஒரு முக்கியமான காரணி ஆகும்.

(ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) (i) பொருளாதாரம் ஒன்றின் நான்கு (04) பிரதான பொருளாதார வளங்களை (உற்பத்திக் காரணிகள்) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) மேலுள்ளவற்றுள் ஏதாவது இரண்டினை (02) **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) பொருளாதாரமொன்றில் மூன்று அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவையாவன யாருக்காக உற்பத்தி செய்தல்?, எந்த அளவில் எதனை உற்பத்தி செய்தல்?, எவ்வாறு உற்பத்தி செய்தல்? என்பனவாகும்.

மேலுள்ள ஒவ்வொரு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையும் சந்தைப் (முதலாளித்துவ) பொருளாதாரத்தினாலும் திட்டமிடப்பட்ட (சோசலிச) பொருளாதாரத்தினாலும் எவ்வாறு தீர்க்கப்படுகின்றன என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) உங்களுக்குப் பண்டமொன்றிற்கான பின்வரும் கேள்வி (Qd) மற்றும் நிரம்பல் (Qs) சமன்பாடுகள் தரப்பட்டுள்ளன:

$$Qd = 400 - 2P$$

$$Qs = -100 + 3P$$

(i) பண்டத்தின் சமநிலை விலையைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) பண்டத்தின் சமநிலைக் கணியத்தைக் **கணிப்பிடுக.** (01 புள்ளி)

(b) (i) கேள்வி வளையியின் சாய்வு கீழ்நோக்கிச் செல்வது ஏன் என்பதற்கான காரணத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(ii) வரைபொன்றின் உதவியுடன் நுகர்வோர் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை எண்ணக் கருக்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) (i) பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியிடும் மூலங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) அரச தொழில்முயற்சி நிறுவனங்களின் நன்மைகள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) பணத்திற்கான கேள்விக்குரிய மூன்று (03) நோக்கங்களை (Motives) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

பின்வரும் அட்டவணையானது வளங்களின் ஒரு அலகினைப் பயன்படுத்தி பாகிஸ்தான் மற்றும் இந்தியாவினால் தயாரிக்கப்பட்ட வெங்காயம் மற்றும் பூண்டுகளின் கிலோகிராம்களைக் காட்டுகிறது:

| நாடு | வெங்காயம் (கிலோகிராம்) | பூண்டு (கிலோகிராம்) |
|---|---|---|
| பாகிஸ்தான் | 24 | 12 |
| இந்தியா | 4 | 8 |

(a) (i) முறையே ஒவ்வொரு பொருளினதும் உற்பத்தியில் முழு நயத்தைக் கொண்டிருப்பது எந்த நாடு என்பதை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(ii) முறையே ஒவ்வொரு பொருளினதும் உற்பத்தியில் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருப்பது எந்த நாடு என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) சர்வதேச வர்த்தகத்தின் இரண்டு (02) அனுகூலங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

(A) (a) 2019 ஏப்ரல் 21 ஆந் திகதிய பயங்கரவாதத் தாக்குதல் (உயிர்த்த ஞாயிறு தாக்குதல்) இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்துகின்ற விளைவுகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) நேரில் வரிகளின் நோக்கங்கள் இரண்டினைக் (02) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(B) ஓர் ஆண்டு காலப்பகுதிக்காக பொருளாதாரம் ஒன்றின் தேசிய கணக்குகள் தொடர்பிலான பின்வரும் அனுமானத் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| | **ரூபா மில்லியன்** |
|---|---|
| விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடி | 3,000 |
| உற்பத்தி, சுரங்கவியலும் குவாரியியலும் மற்றும் ஏனைய கைத்தொழில்கள் | 2,600 |
| நிருமாணம் | 2,000 |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தங்குமிடம் மற்றும் உணவுச் சேவை நடவடிக்கைகள் | 4,500 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் | 2,000 |
| நிதியியல் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 2,500 |
| இருப்பிட உரிமை உள்ளிட்ட நிலம், வீடு, மனை வாங்கி விற்றல் நடவடிக்கைகள் | 1,200 |
| தொழில்சார் சேவைகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட சேவை நடவடிக்கைகள் | 2,000 |
| அரச நிருவாகம், பாதுகாப்பு, கல்வி, மனித உடல்நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 10,500 |
| பொருட்கள் மீதான வரிகள் | 1,500 |
| பொருட்கள் மீதான மானியங்கள் | 1,000 |

மேலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி,

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக.**

(a) மொத்த பெறுமதி சேர்த்தல் (GVA) – அடிப்படை விலையில் (06 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில் (03 புள்ளிகள்)

(C) தேசிய கணக்குகளைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்திற்கான காரணங்கள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |